பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 ஆடி 01 செவ்வாய்க்கிழமை (16-07-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 150

# மிகப் பயங்கர நிதி நெருக்கடியில் இலங்கை அரசாங்கம் தத்தளிப்பு!

## போர்ச் செலவு அதிகரிப்பின் விளைவு

கொழும்பு, ஜூலை 16

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரான 48 வருட காலத்தில் என்றுமே இல்லாதவாறு அரசாங்கத்துக்கு மிகப் பயங்கர நிதி நெருக்கடி தோன்றியுள்ளது.

தான் எதிர்நோக்கும் இந்த நெருக்கடியைச் சமாளிப்பதற்கு எங்கிருந்து பணத்தைப் பெறுவது என்று தெரியாமல் அரசாங்கம் திண்டாடுவதாக நிதி வட்டாரங்கள் தெரிவித்தன.

போருக்கான செலவு மிக உச்சத்துக்குச் சென்று கொண்டிருப்பதே இந்த நிதித் தட்டுப்பாட்டுக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அரசு - விடுதலைப் புலிகள் போர் நிறுத்தம் முறிந்த பின்னர் மட்டும் போர்ச் செலவு 4,600 கோடி ரூபா என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வருடத்துக்குப் பாதுகாப்புச் செலவுக்கென ஒதுக்கப்பட்ட 3,800 கோடி ரூபாவும் ஆறு மாதங்களிலேயே (கடந்த ஜூன் மாதத்திலேயே) முடிந்து விட்டதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இத்தகைய ஒரு சூழ்நிலை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தேசிய மீட்பு முன்னணி கொழும்பில் நேற்று பேரணி

கொழும்பு, ஜூலை 16

நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்குமாறு கோரி தேசிய மீட்பு முன்னணி நேற்று கொழும்பு கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெரும் எண்ணிக்கையான பௌத்த பிக்குகளும் கலந்து கொண்டனர்.

தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதாக பொதுமக்கள் ஐக்கிய முன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா லண்டனுக்கு இரகசிய விஜயம்!

கொழும்பு, ஜூலை 16

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த சனிக்கிழமை லண்டன் புறப்பட்டுச் சென்றுள்ளார். அவருடன் அவரது இரு பிள்ளைகளும் சென்றுள்ளனர் என்று லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதியின் உத்தியோக பூர்வமற்ற இந்த லண்டன் விஜயம் மிகவும் ரகசியமாக வைக்கப்பட்டிருந்ததாகவும்—

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அமைச்சர்கள் கூட இதனை அறிந்திருக்கவில்லை என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யால சரணாலயப் பிரதேசத்துக்குள் புலிகள் பெருமளவில் ஊடுருவல்!

### உல்லாசப் பயணிகளுக்குத் தடை

யால வனவிலங்கு சரணாலய பிரதேசத்திற்குள் பெரும் எண்ணிக்கையான தமிழீழ விடுதலைப் புலிகள் போராளிகள் ஊடுருவியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அதனைத் தொடர்ந்து சரணாலயப் பகுதிக்கு உல்லாசப் பயணிகள் செல்வது தடை செய்யப்பட்டிருக்கிறது. அது தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

கடந்த 13 ஆம் திகதி நூற்றுக்கு மேற்பட்ட விடுதலைப் புலிகள் போராளிகள் ஆயுதங்களுடன் சரணாலயப் பிரதேசத்திற்குள் பிரவேசித்தனர் என்று சொல்லப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து சரணாலயத்துக்குச் செல்லும் பாதைகளில் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகப் பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகள் போராளிகளைத் தேடி, பாதுகாப்புப் படையினர் யால பகுதியில் இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக ''வெரித்தாஸ்'' தெரிவித்தது. (அ- 10)

## இராணுவ நடவடிக்கை கிழக்கில் பூர்த்தி

### படையினர் முகாம் திரும்பினர்

கொழும்பு, ஜூலை 16

கிழக்கில் கடந்த சில தினங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த இராணுவ நடவடிக்கை ஞாயிறு முதல் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

வாழைச்சேனைக்கு வடக்கே உள்ள வாகரைப் பிரதேசத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை தற்போது இடைநிறுத்தப்பட்டிருப்பதாக பாதுகாப்புத் தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

''பொங்கும் கடல் அலைகள்'' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை மூலம் வாகரை நகரப் புறத்தை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த படையினர் தமது இராணுவ நடவடிக்கையை முடித்துக்கொண்டு முகாம்களுக்குத் திரும்பி உள்ளனர்.

அதேசமயம் இந்த இராணுவ நடவடிக்கை இராணுவத்துக்குப் பெரும் தோல்வியையே அளித்துள்ளது என்று லண்டனில் விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை தெரிவிப்பதாக வெரித்தாஸ் வானொலி நேற்றுத் தெரிவித்தது

(இ-3)

## தெற்கிலிருந்து இளைஞர் வருவதற்கு அனைத்து தமிழ் கட்சிகளும் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 1[illegible]

யாழ்ப்பாணத்தில் சிவில் மற்றும் புனர் நிர்மாணப் பணிகளைச் செய்வதற்காக தென்னிலங்கையில் இருந்து பத்தாயிரம் இளைஞர்களைத் திரட்டி, அவர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கி யாழ்குடாநாட்டுக்கு அனுப்பி வைக்கும் அரசின் புதிய திட்டத்தை —

கொழும்பில் இயங்கும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஆட்சேபித்திருப்பதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. அரசின் உத்தேச திட்டம் பற்றிய அறிவிப்பைக் கேட்டு தமிழ் அரசியல் தலைவர்கள் அதிர்ச்சியும் கலக்கமும் அடைந்துள்ளனர் என்று பி. பி. ஸி. குறிப்பிட்டது.

அரசின் திட்டத்தை ஆட்சேபிக்கும் வகையில் ''புளொட்'' பிரமுகர் தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் ஆகியோர் கருத்துத் தெரிவித்துள்ளனர். (உ- 3)

## 'வாதுவ' கப்பல் மூலம் தனியாருக்கு பொருள்கள்

கொழும்பு, ஜூலை 16

கொழும்பைச் சேர்ந்த கப்பல் நிறுவனம் ஒன்று, தனியார் வர்த்தகர்களின் பொருள்களை ஏற்றிச்செல்ல, கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் கப்பல் சேவையை ஆரம்பித்துள்ளது.

''மேர்ச் வாதுவ'' என்னும் இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்தில் பொருள்களை ஏற்றிக் கொண்டிருப்பதாக நிறுவனத்தின் பணிப்பாளர் வி. சி. ஜயசூரிய தெரிவித்தார்.

இக்கப்பல் 3 ஆயிரம் மெற்றிக் தொன் பொருள்களை ஏற்றிக் கொண்டு செல்லக் கூடியது.

இக்கப்பல் சேவைக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தகர்களுக்கு பொருள்களை அனுப்பும் தனியார் வர்த்தகர்கள் கப்பல் கட்டணத்தைச் செலுத்துவர்.

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்கள் [illegible] படும்.

## வடமராட்சியில் ஞாயிறன்று பகல் ஊரடங்கு

வடமராட்சி, ஜூலை 16

வடமராட்சியில் கடந்த ஞாயிறன்று காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணி வரை உத்தியோகப்பற்றற்ற ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பாஸ் கெடுபிடி: 4 தமிழர்கள் தற்கொலை

வடக்கில் இருந்துவவுனியா ஊடாக தெற்கே செல்வதற்கு இளம் வயதினருக்கு அனுமதி மறுக்கப்பட்டு வருவதால் விரக்தியின் எல்லைக்குச் சென்ற நான்கு தமிழ் இளைஞர்கள் தற்கொலை செய்துள்ளதாகத் தற்போது தகவல் வெளிவந்துள்ளது

தமிழ் அரசியல் கட்சி ஒன்றைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இத்தகவலை பி. பி. ஸிக்கு தெரிவித்தார்.

இந்த நால்வரும் தனித்தனியாக தற்கொலை செய்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பதினைந்து வயதுக்கும் முப்பது வயதுக்கும் இடைப்பட்டோர் தாண்டிக் குளம் ஊடாக தெற்கே செல்ல அனுமதி மறுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்வாய் வேவிலந்தை

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம்

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த மகோற்சவம் இன்று காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

**29 - 07 - 1996** திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இரதோற்சவமும் **30 - 07 - 1996** காலை 6 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

— பரிபாலன சபை —

(சி/2630)



## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கூறுவிலை அறிவித்தல்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ தேவைக்காகப் பின்வரும் பொருள்களை விநியோகம் செய்யக்கூடியவர்கள் மாநகரசபையின் மராமத்துப் பொறியியலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

01. வெள்ளை மணல்
02. பனை மரங்கள் / சிலாகைகள்
03. கிடுகுகள்

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(C/ 2632)



## NEW SCIENCE ACADEMY

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

### ENGLISH LANGUAGE CLASSES

**1. General English Course**

★ சகல மொழித்திறன்களையும் கொண்ட கற்கை நெறி.

10 Months Course

★ உயர்கல்வி கற்கும்/ கற்கவிருக்கும் மாணவருக்குரியது.
★ வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

திங்கள், வியாழன்
முற்பகல் 10 — 12-30 வரை

**2. Basic English Course**

★ மொழியில் அடிப்படைத் திறனைப் பெற விரும்புபவருக்குரியது.

FOUR MONTHS COURSE

வார நாள்கள்: திங்கள், வியாழன்
பிற்பகல் 2-30 — 4-30

**ஆரம்பம்: 18 - 07 - 96**

**3. G.C.E. 'A' LEVEL – 1997**

**ENGLISH LITERATURE**

சனி, ஞாயிறு
பிற்பகல் 2 — 4 வரை

**ஆரம்பம்: 27 - 07 - 96**

ஆசிரியர்: த.ந. பஞ்சாட்சரம்

மேலதிக விவரங்களுக்கு:
நிர்வாகி,
புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம்

(சி/2636)


## சமய சந்நிதிகளில்

கதிர்காமக் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகிறது இம்மாதம் 27 ஆம் திகதி தீ மிதிப்பு விழாவும் 31 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

உற்சவத்தின்போது சனிபகவானின் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்படும் விசேட நிகழ்ச்சியும், விசேட லக்ஷ்மி ஹோமமும் நடைபெற உள்ளன. (அ)

★ ★ ★

யாழ். வண்ணை ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (அ-3)

★ ★ ★

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்த திருநாள் கொண்டாட்டம் இன்று பி.ப 4.30 மணிக்கு ஆலய வளவில் இடம்பெறவுள்ள கொடியேற்றத்தைத் தொடர்ந்து ஆரம்பமாக உள்ளது.

ஒன்பது நாள்கள் மாலை ஆராதனைகளைத் தொடர்ந்து 25 ஆம் திகதி காலை திருநாள் பூசைப்பலியும், திருச்சொருப ஆராதனையும் இடம்பெறும். (அ-51)

## தேர்தல் ஒத்திவைப்பு

உள்ளூராட்சித் தேர்தல்கள் மீண்டும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது பிரதி தேர்தல் ஆணையாளர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

## யாழ். குறிகாட்டுவான் பஸ் சேவை

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்.- குறிகாட்டுவான் பஸ் போக்குவரத்துச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் காலை 8 மணிக்கும், பிற்பகல் 2 மணிக்கும் யாழ். பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து குறிகாட்டுவான் நோக்கி பஸ் புறப்படும்.

## கலைப்பீட விஞ்ஞானபீட விரிவுரைகள்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட விரிவுரைகளும், மருத்துவ பீட முதலாம், இரண்டாம் வருட விரிவுரைகளும் நேற்று ஆரம்பமாகின.

விரிவுரைகளுக்கு 50 சதவீதமான மாணவர்கள், வருகை தந்திருந்தனர் என்றும்—

அடுத்து வரும் வாரங்களில் மேலும் மாணவர்கள் சமுகமளிப்பர் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார். (இ-3)

# யாழ். குடாநாட்டின் சனத்தொகை எவ்வளவு?

கொழும்பு, ஜூலை 16

படையினரினால் கைப்பற்றப்பட்டுள்ள யாழ். குடாநாட்டை மீண்டும் கட்டி எழுப்புவதற்காக வெளிநாடுகளின் உதவியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோரி இருக்கிறார் அல்லவா?

இது தொடர்பாக வெளிநாட்டு ராஜதந்திரிகளை மாநாடு ஒன்றுக்கு ஜனாதிபதி அழைத்திருந்தார்.

அந்த மாநாட்டில் யாழ்ப்பாணத்தை புனர்நிர்மாணம் செய்யவேண்டிய அவசியம் குறித்தும் இதற்குத் தேவையான நிதியின் அளவீடு குறித்தும் ராஜதந்திரிகளுக்கு விளக்கப்பட்டது.

அந்த மாநாட்டில் பகுதி - 1, பகுதி - 2 அடங்கிய 29 பக்க ஆவணம் ஒன்றும் ராஜதந்திரிகளிடம் கையளிக்கப்பட்டது.

ஆவணத்தின் பகுதி – 1 இல் குடாநாட்டின் உணவு நிவாரணம், மீளக்குடியேற்றம் ஆகியவை தொடர்பாக விளக்கப்பட்டிருந்தது. இதற்கு 11 கோடி 20 லட்சம் அமெரிக்க டொலர் தேவை என்று மதிப்பிடப்பட்டிருந்தது.

ஆவணத்தின் பகுதி - 2 இல் குடாநாட்டின் புனர்வாழ்வு, புனரமைப்பு ஆகியவை தொடர்பாக விளக்கப்பட்டிருந்தது. இதற்கு 16 கோடி 20 லட்சம் டொலர் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால் ஆவணத்தின் பகுதி – 1 இன் அடிக்குறிப்பில் குடாநாட்டின் சனத்தொகை 1981 குடிசனமதிப்பீட்டின்படி 83 லட்சம் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. குடாநாட்டின் விஸ்தீரணம் 1025 சதுர கிலோ மீற்றர் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த ஆவணம் ராஜதந்திரிகளிடம் கையளிக்கப்பட முன்னரேயே இதில் உள்ள தவறு கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால் அது திருத்தப்படாமலேயே ராஜதந்திரிகளிடம் கையளிக்கப்பட்டது.

ராஜதந்திரிகளும் இதனைக் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

இப்படி சண்டே ரைம்ஸ் அரசியல் செய்தியாளர் தெரிவித்துள்ளார். (இ)

## வெள்ளவத்தையில் ஆயுதம் மீட்பு: சன்மானமும் பதவி உயர்வும் பொலீஸாருக்கு கிடைத்தன

கொழும்பு, ஜூலை 16

கடந்த வாரம் வெள்ளவத்தையில் பெருமளவு ஆயுதங்களைக் கைப்பற்றிய பொலீஸாருக்கு பதவி உயர்வும் சன்மானமாக ரொக்கப் பணமும் வழங்கப்பட்டன.

இவர்களைக் கௌரவிக்கும் முகமாக நேற்றுக் காலை பொலீஸ் மா அதிபர் டபிள்யூ பி. ராஜகுரு தலைமையில் பொலீஸ் தலைமையகத்தில் வைபவம் ஒன்று நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படை உறுப்பினர் கைது செய்யப்பட்ட பம்பலப்பிட்டி வீதித் தடை பரிசோதனை நிலையத்தில் கடமையிலிருந்த சார்ஜன்ட், சப் இன்ஸ்பெக்டராகப் பதவி உயர்த்தப்பட்டார். அவருக்கு 3 லட்சம் ரூபா சன்மானமும் வழங்கப்பட்டது.

இரு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் சார்ஜன்டுகளாகப் பதவி உயர்த்தப்பட்டதுடன் அவர்களுக்கு தலா இரண்டு லட்சம் ரூபா சன்மானமும் வழங்கப்பட்டது.

அங்கு கடமையில் இருந்த ஊர்காவல் படைவீரர் நிரந்தர பொலீஸ் சேவையில் சேர்க்கப்பட்டதுடன் ஒரு லட்சம் ரூபா சன்மானமும் வழங்கப்பட்டது.

இந்தப் பொலீஸார் சந்தேக நபரைக் கைது செய்ததன் காரணமாக வெள்ளவத்தையில் ஆயுதங்களையும், வெடிமருந்துகளையும் கைப்பற்ற முடிந்தது.

ஆயுதங்களைக் கைப்பற்றிய பொலீஸாருக்கு சன்மானமும் பதவி உயர்வும் வழங்கப்பட்டுள்ளன. (இ-3)

## புலிகள் குறித்து விவாதம்

சென்னை, ஜூலை 16

நாளை ஆரம்பமாகவிருக்கும் தமிழக சட்டப் பேரவையின் கூட்டத் தொடரில், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தமிழகத்தில் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுவது பற்றியும் விவாதிக்கப்படவிருக்கிறது. (இ-3)


## ஆட்கள் தேவை

புன்னாலைக்கட்டுவன் தெற்கு (சந்தி) லட்சுமி பவான் தேநீர்ச்சாலைக்கு கோக்கி, ரீமேக்கர் தேவை. சம்பளம்நேரில் பேசி முடிவெடுக்கலாம். நேரில் சமுகம் தரவும்.

உரிமையாளர்
திருமதி ச. முருகையா

(41809)



உங்கள் உணவுத் தேவைகளுக்கு

# "ஹோட்டல் றொலெக்ஸ்"

"ஸ்பெசல் புறியாணி" மற்றும்
மட்டன் றோள், மஸ்கட், மிக்ஸர்,
கேக் வகைகளுக்கு **றொலெக்ஸ்**

★ புறியாணி ஓடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்

(41810)



## NEW SCIENCE ACADEMY
NALLUR

6 ஆம், 7 ஆம், 8 ஆம், 9 ஆம்,
10 ஆம், **G.C.E. (O/L)**

வகுப்புகளுக்கான சகல பாடங்களும் நடைபெறுகின்றன.

நிர்வாகி

(சி/2635)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவகௌடா அரசுக்கு வழங்கிய ஆதரவை விலக்க காங்கிரஸ் முஸ்தீபு

புதுடில்லி, ஜூலை 16

பிரதமர் தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசுக்கு. இதுவரை காலமும் அரசாங்கத்துக்கு வெளியிலிருந்து வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொள்ளப்போவதாக இந்திய தேசிய காங்கிரஸ் மிரட்டியிருக்கின்றது.

இந்தியத் தேசியப் பத்திரிகைகள் இந்தத் தகவலை நேற்று வெளியிட்டன.

காங்கிரஸ் கட்சித் தலைவர் நரசிம்மராவ் குறித்து தேவகௌடா அரசின் உள்துறை அமைச்சரான இந்திரஜித் குப்தா தெரிவித்த கருத்துக்களே காங்கிரஸ்காரர்களைச் சீற்றம் கொள்ள வைத்திருக்கின்றது.

''தற்போதைய ஐக்கிய முன்னணி அரசுக்கு அளிக்கும் ஆதரவை காங்கிரஸ் விலக்கி, புதிய தேர்தல் ஒன்றுக்கு வழிவகுக்குமானால் அத்தேர்தலில் காங்கிரஸ் பூண்டோடு அழிந்து விடும்'' — என்று கடந்த சனியன்று தமிழகத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் அமைச்சர் இந்திரஜித் குப்தா குறிப்பிட்டிருந்தார் என்பது தெரிந்ததே.

இந்தப் பாணியில் அமைச்சர் கருத்துத் தெரிவித்ததே காங்கிரஸ்காரர்களைச் சினம் கொள்ள வைத்திருக்கின்றது.

''ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவைத் தொடர்வதா? ஆதரவை விலக்கினால் காங்கிரஸ் பூண்டோடு அழிந்து விடுமா? — என்பதெல்லாம் காங்கிரஸின் உட்கட்சி விவகாரம். காங்கிரஸின் ஆதரவைப் பெற்று அரசு அமைத்திருக்கும் ஐக்கிய முன்னணியில் மூத்த அமைச்சர் ஒருவர் இவ்வாறு பொறுப்பில்லாமல் எமது உட்கட்சி விவகாரத்தில் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது'' — என்று காங்கிரஸ் பேச்சாளர் வி. என் காட்கில் தெரிவித்தார்.

அமைச்சர் இந்திரஜித் குப்தாவின் பகிரங்க அறிவிப்புக் குறித்து பிரதமர் தேவகௌடா அதிருப்தியும் விசனமும் கொண்டிருப்பதாக இந்தியப் பத்திரிகைகள் தெரிவித்திருக்கின்றன.

'இப்போது நடைபெறும் காங்கிரஸ் விவாதங்கள் அக்கட்சியில் உள்வீட்டுவிவகாரம். அத்தகைய விவகாரங்களில் எமது அரசின் அமைச்சர்கள் தலையிடுவது அவசிய மற்றது. அமைச்சர் குப்தாவின் கருத்தினால் காங்கிரஸுக்கும் அதன் தலைவருக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருத்தம் தெரிவிக்கிறேன். இத்தகைய உட்கட்சி விடயங்களில் தலையிட வேண்டாம் என்று எமது முன்னணியில் உள்ள தலைவர்களுக்கு அறிவுறுத்த இருக்கிறேன்'' — இவ்வாறு பிரதமர் தேவகௌடா தெரிவித்ததாக ''இந்துஸ்தான் டைம்ஸ்'' நாளிதழ் குறிப்பிட்டது.

தற்போது இந்தியாவில் பல கட்சிகளின் கூட்டமைப்பான ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருப்பது தெரிந்ததே. அக்கூட்டமைப்பில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட்கட்சி காங்கிரஸ் குறித்து கடும் போக்கையே இதுவரை கடைப்பிடித்து வந்தது. கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த அமைச்சர் குப்தா தமது கட்சியின் நிலைப்பாட்டில் நின்று காங்கிரஸை விமர்சித்திருப்பதாக அவதானிகள் சிலர் குறிப்பிட்டனர்.

இந்திய சரித்திரத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்று அரசில் இடம் பெறுவது இதுவே முதல் தடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## சன நெரிசலில் 37 பேர் மரணம்

புதுடில்லி, ஜூலை. 16

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் சன நெரிசலில் அகப்பட்டு 37 இந்துக்கள் மரணம் அடைந்தனர். 40 பேர் பேர் காயமடைந்தனர்.

மத்திய பிரதேசத்தின் பிப்ரா நதிக்கரையில் உள்ள மகா காளி கோயில் உற்சவத்துக்கு வந்திருந்தவர்களே சனநெரிசலில் சிக்கினர்.

சுமார் 2லட்சம் பக்தர்கள் அதிகாலையில் புனித நீரில் குளித்து விட்டு சுவாமி தரிசனத்துக்காக அவசரம் அவசரமாகச் சென்ற போது இந்த நெரிசல் ஏற்பட்டது. (இ)

13 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்கும்

# பங்களாதேஷ் முன்னாள் ஜனாதிபதி நாடாளுமன்றம் வருவதற்கு அனுமதி

டாக்கா, ஜூலை 15

பங்களாதேஷின் புதிய நாடாளுமன்ற அமர்வு நேற்று இடம்பெற்ற போது ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக 13 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் முன்னைநாள் ஜனாதிபதி ஏர்ஷத் நாடாளுமன்றக் கூட்டங்களில் பங்கு பற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

சிறைவாசம் அனுபவித்து வரும் ஏர்ஷாத் அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐந்து தொகுதிகளில் போட்டியிட்டு ஐந்திலும் வெற்றி பெற்றார்.

மேலும் அறுதிப் பெரும்பான்மையற்ற தற்போதைய அரசிற்கு நியந்தனையற்ற ஆதரவை ஏர்ஷாத் வழங்க முன்வந்துள்ளார். (இ-10)

## இம்ரான் கானுக்கு எதிராக வழக்கு

### நேற்று விசாரணை ஆரம்பம்

லண்டன், ஜூலை 16

முன்னாள் பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணியின் கப்டனான இம்ரான் கானுக்கு எதிராக முன்னாள் இங்கிலாந்து அணித் தலைவர் இயன் பொத்தமும் இங்கிலாந்து முன்னாள் கிரிக்கெட் வீரர் அலன் லாம்ப்பும் தாக்கல் செய்திருக்கும் நஷ்டஈடு கோரிக்கை வழக்கு நேற்று லண்டன் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்தது.

டெஸ்ட் ஆட்டங்களின் போது பந்தை சுரண்டிச் சேதப்படுத்தியதன் மூலம் முறையற்ற விதத்தில் தனக்கு சாதக நிலையைத் தோற்றுவித்துக் கொண்டார் என்று இயன் பொத்தம் குறித்து இம்ரான் கான் கூறியகருத்தே சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறது

இவ்வாறு பகிரங்கக்குற்றச்சாட்டு தெரிவித்ததன் மூலம் தங்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தியிருப்பதாக இம்ரான் கான் மீது இயன் பொத்தமும் அலன் லாம்ப்பும் இந்த வழக்கில் குற்றம் சுமத்தியிருக்கின்றார்கள்.

இந்த வழக்கு நேற்று நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் போது பொத்தமும், லாம்ப்பும் தமது தரப்பு சாட்சியங்களை நீதிமன்றத்தில் தெரிவிப்பர் என நேற்றுக் காலையில் அறிவிக்கப்பட்டது.

வழக்குத் தாக்கல் செய்த பொத்தத்துக்கும் லாம்ப்புக்கும் பின்னணியில் இருந்து முன்னாள் மேற்கிந்தியத் தீவுகள் அணித்தலைவர் கிளைவ் லொயிட்டும், முன்னாள் இங்கிலாந்து வீரர் டெரிக் பிறிங்களும் ஆதரவு தரக்கூடும் எனக் கருதப்பட்டது.

பாகிஸ்தான்— இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டித் தொடர் ஒன்று நான்கு வருடங்களின் பின்னர் அடுத்த வாரம் ஆரம்பிக்க இருக்கையில் இந்த வழக்கு நீதிமன்றத்துக்கு வந்திருக்கின்றது.

இயன் பொத்தமும், இம்ரான் கானும் உலக கிரிக்கெட் டெஸ்ட் சரித்திரத்தில் புகழ்பெற்ற இருபல்துறை வல்லுநர்கள் (''ஆல் ரவுண்டர்'') என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## உலக அரங்கில்

# கடாபி எதிர்ப்பு கோஷம் எழுப்பிய 20 பேர் லிபியாவில் சுட்டுக்கொலை!

லண்டன், ஜூலை. 16

லிபியத் தலைவர் கேணல் கடாபிக்கு எதிராக கோஷம் எழுப்பியோர் மீது, கடாபிக்கு ஆதரவான படைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருபது பேர் வரை உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

திரிப்போலியில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் இவ்வாறு தகவல் வெளியிட்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

ஆனால்—

தலைநகர் திரிப்பொலியில் இரண்டு உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையில் நடைபெற்ற ஆட்டம் வன்முறையில் முடிவுற்றதில் எட்டுப் பேர் உயிரிழந்ததாவும் 39 பேர் காயமடைந்ததாகவும் லிபிய தேசிய தொலைக்காட்சி அறிவித்தது.

உதைபந்தாட்ட மைதானத்தில் கூடியிருந்த மக்களில் கணிசமான எண்ணிக்கையானோர் ஒன்று கூடி லிபியத் தலைவர் கடாபிக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர் என்றும்—

மைதானத்திலிருந்த கடாபியின் மகனின் மெய்ப்பாதுகாவலர்கள் அந்த மக்கள் கூட்டத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்ததிலேயே பொதுமக்கள் உயிரிழக்கவும் காயமடையவும் நேரிட்டது என்று திரிப்பொலியில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

உதைபந்தாட்ட மைதானத்தில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவத்தை அடுத்து சம்பந்தப்பட்ட இரு உதைபந்தாட்ட அணிகளும் கலைக்கப்பட்டதாக லிபிய தொலைக்காட்சி அறிவித்தது.

இதற்கிடையில் கொல்லப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கை 50க்கு அதிகம் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (உ-10)

## மேற்கு வங்க மாநிலத்தில் பெரும் மழை, நிலச்சரிவு

### 34 பேர் இறந்தனர்

புதுடில்லி ஜூலை 16

மேற்கு வங்க மாநிலத்தில் பெருமழை, நிலச்சரிவு காரணமாக குறைந்தது 34 பேர் இறந்துள்ளதாகவும் — ஒரு லட்சத்து 75 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

வெள்ளத்தால் சூழப் பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளதாக மேற்கு வங்க நிதி அமைச்சர் அசீந்தஸ் குப்தா செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

அதே சமயம் வங்காள தேசத்திலும் மீண்டும் பெரு வெள்ள பெருக்கு ஏற்பட்டுள்ளது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெள்ளத்தால் சூழப் பட்டுள்ளனர். இ - 4)

# சமாதானப் போக்கை கைவிட்டால் இஸ்ரேலுடனான உறவு சீர்குலையும்

### வளைகுடா நாடுகள் எச்சரிக்கை

புதுடில்லி ஜூலை 16

மேற்காசிய அமைதித் திட்டத்திலிருந்து இஸ்ரேல் பின் வாங்க முற்பட்டால், அதனுடன் உறவுகளை இயல்பாக்கிக் கொள்ளும் முயற்சிகளை நிறுத்தி விடப் போவதாக வளைகுடா ஒத்துழைப்புச் சபையின் 6 உறுப்பு நாடுகளான சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், குவைத், பாஹ்ரைன், கட்டார், ஓமான் ஆகியவையும்— மற்றும் எகிப்து, சிரியா ஆகிய அரபு நாடுகளும் அச்சுறுத்தியுள்ளன.

மஸ்கற்றில் முடிவடைந்த அந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சர்களின் இரண்டு நாள் மாநாட்டில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கை மட்றீட் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட ''சமாதானத்திற்காக நிலம்'' என்ற திட்டத்தைக் கடைப்பிடிக்கும்படி இஸ்ரேலிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

1967 இல் இஸ்ரேலால் கைப்பற்றப்பட்ட கோலன் குன்றுப் பகுதிகளை திருப்பித் தர வேண்டும் என்ற சிரியாவின் நிலைக்கு மாநாடு ஆதரவு தெரிவித்தது

இதனிடையே பாலஸ்தீன அதிபர் யசீர் அரபாத் கெய்ரோவில் எகிப்திய அதிபர் முபாரக்கை சந்தித்து மேற்காசிய அமைதித் திட்டத்தை பற்றி விவாதித்தார்

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தான்யாகோ எதிர்வரும் வியாழக்கிழமை எகிப்து செல்லவிருக்கிறார். பதவி ஏற்ற பிறகு அரபு நாடு ஒன்றுக்கு அவர் செல்வது [illegible] (இ-4)

## சவூதி மக்கள் மத்தியில் அமெரிக்க எதிர்ப்பு உணர்வு

ஜெட்டா, ஜூலை 16

சவூதிஅரேபியாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படைகளுக்கு எதிரான உணர்வு சவூதி அரேபிய மக்களிடையே வேகமாக வளர்ந்து வருவதாக கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.

உலக இஸ்லாத்தின் புனித மதத் திருத்தலங்கள் கொண்ட நாட்டை இஸ்லாம் சாராத ஒரு நாடு பாதுகாப்பதை சவூதி அரேபிய மக்கள் விரும்பவில்லை.

''அரபு எண்ணெய் வளங்களைச் சுரண்டத்தான் அமெரிக்கப் படைகள் இங்கு இருக்கின்றன; எம்மைப் பாதுகாக்க அல்ல'' என்ற உணர்வும் கணிசமான மக்களிடையே எழுந்து வருவதாக கூறப்படுகிறது.

மக்களின் இத்தகைய உணர்வுகள் சவூதியின் ஆளும் அமைப்பிற்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்


### மீண்டும் ஆரம்பம்

சிவாஸ் மணிக்கூட்டுத் தொழிலகம் 568 B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சகல விதமான மணிக்கூடுகளும் திருத்திக் கொடுக்கப்படும். (41732)

### BRIGHTON INSTITUTE

சகல பாடங்களுக்குமான 6 – 11ம் ஆண்டுகளுக்கான வகுப்புகள் சிறந்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர் குழுவால் நடத்தப் பெறுகிறது. Maths அடிப்படையிலிருந்து சிறந்த பேறுபெற கற்பிக்கப்படும்.
FLETCHERS LANE
Chundikuli, Jaffna (41733)

### மீண்டும் இயங்குகிறது

மீண்டும் யாழ் நகரில் புதிய தமிழ் வீடியோ படங்களை ஒறிஜினல் பிரதி மூலம் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்: றீகல் வீடியோ மூவிஸ், ஈச்சமோட்டை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். (மினி சினிமாக்காரர்களுக்கு ஒறிஜினல் கொப்பி தரப்படும்.) (41797)

### தவறிவிட்டது

ஜெகதீஸ்வரன் வரதன் (உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்) ஆகிய எனது 761210610V இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை 13 07-96 அன்று நுணாவில் கைதடிக்கு இடையில் தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். தே. சாரங்கபாணி தேவாலய வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரி. (41799)

### வீடு தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் அரச உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றிற்கு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு வீடு தேவை இல: 501, மே/பா. 'உதயன்' பணிமனை நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


# வாகரையிருந்து வாழைச்சேனைக்கு அகதிகள் பெருமளவில் இடம்பெயர்வு

## வழியில் 3 கர்ப்பிணிகள் குழந்தைகளை பிரசவித்தனர்

கொழும்பு ஜூலை 16

தற்போது படையினர் கிழக்கில் நடத்தி வரும் இராணுவ நடவடிக்கை காரணமாக வாகரையிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகி வெளியேறிக் கொண்டிருக்கின்றனர்

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மேற்கே உள்ள வாகரைப் பிரதேசத்தில் இருந்து சுமார் 20 மைல்கள் கடந்து இவர்கள் வாழைச்சேனை நோக்கி சென்றுகொண்டிருப்பதாகத்தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளில் பலர் வாகரைக்கும் வாழைச்சேனைக்கும் இடையில் உள்ள இறால் ஓடை, நாசிலன்தீவு, காயான்கேணி ஆகிய கிராமங்களிலும் தங்கி உள்ளனர்.

வாழைச்சேனைக்கு வந்து சேர்ந்துள்ள அகதிகளுக்கு நான்கு நாள்களுக்கு உலர் உணவு வழங்குவதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது என்றும் —

வாகரைக்குச் சமீபமாக தங்கி உள்ள அகதிகளுக்கு ஒரு வாரத்துக்குரிய உலர் உணவு வழங்குவதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் — அப்பகுதி பிரதேச செயலாளர் எஸ். முரளிதரன் அறிவித்துள்ளார்.

வாழைச்சேனையில் தங்கி உள்ள அகதிகளுக்கு நிவாரண உதவிகளை வழங்குமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், எஹெட் ஆகிய நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், வாகரையிலிருந்து இடம் பெயர்ந்த பெண்களில் மூவர் வழியில் குழந்தைகளைப் பிரசவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றுள் ஒன்று ஆண் குழந்தை. மற்றவை பெண் குழந்தைகள்

மருத்துவ வசதிகள் இல்லாத காட்டுப் பகுதியிலேயே குழந்தைகள் பிரசவமாகின. (இ)


## கல்யாணி கிறீம் ஹவுஸ்

### உடன் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு சகல வேலைகளுக்கும் முன் அனுபவம் உள்ள வேலையாட்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

கல்யாணி கிறீம் ஹவுஸ்,
73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(41786)



## MODERN EDUCATION CENTRE
KARAVEDDY

**A/L 98** கலை வர்த்தக வகுப்புகள், கணித விஞ்ஞான வகுப்புகள்

ஆரம்பம்:- **17 - 07 - 96**
புதன்கிழமை பி. ப 3.00

எமது வழமையான ஆசிரியர்களுடன் ஆரம்பமாகிறது
(41775)






## மில்க்வைற் விலை குறைப்பு

மில்க்வைற் நீல சோப் — **8/-**
அரைக்கட்டி சோப் — **4/-**
450 கிறாம் சலவைப்பவுடர் — **45/-**
50 கிறாம் சலவைப்பவுடர் — **5/-**

மில்க்வைற் சோப் மேலுறை 25 அல்லது சலவைப்பவுடர் வெற்றுப் பக்கற் 25க்கு ஒரு அப்பியாசக்கொப்பி வழங்கப்படுகிறது.

''மில்க்வைற்''
(சி/2628)


## ஆங்கில தட்டச்சு பயிற்சி

பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கென, ஆங்கில தட்டச்சு பயிற்சி வகுப்புக்களை வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் எதிர்வரும் அக்ரோபர் மாதம் ஆரம்பிக்கவுள்ளது.

தேசிய தொழிற் பயிற்சிச் சபையின் ஆதரவுடன் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளவிரும்புவோர் வதிரியிலுள்ள வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்துக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (இ-173)

## நியமனங்கள் தாமதம்

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் ஏற்பட்டுள்ள நீதியரசர்களின் வெற்றிடங்களுக்கு கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் எவரும் நியமிக்கப்படவில்லை.

இதனால் ஏனைய நீதிபதிகள், நீதிமான்கள் போன்ற சட்ட அதிகாரிகளின் பதவி உயர்வுகளும் பாதிக்கப்பட்டிருப்பதோடு வழக்குகள் வீணாகக் கால தாமதமாகும் நிலையும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நீதியரசர்களை நியமிக்கும் தமது அதிகாரத்தை ஜனாதிபதி உரிய நேரத்தில் பயன்படுத்தாமல் தவறிவருவதாக குற்றம் சுமத்தப் பட்டுள்ளது (உ)

# நெடுந்தீவு மக்களின் கஷ்டமான கடற் பயணம்

நெடுந்தீவு மக்கள் தற்சமயம் கஷ்டமான கடற் பயணத்தை மேற்கொள்ளுகின்றனர்.

''அக்குவாட்டி'' படகு காணாமல் போனதையடுத்து கடந்த இரு தினங்களாக சேவையில் உள்ள படகு பிரயாணிகளுடன் கடல் நீர் உட்புகுந்த வண்ணம் தனது சேவையைத் தொடர்கிறது.

கடல்நீர் படகினுள் புகுவதால் நீரை வாளியினால் அள்ளி வெளியே ஊற்றிய வண்ணம் பிரயாணிகள் தமது பயணத்தைத் தொடர்கின்றனர்

இதே சமயம் அரசாங்க மோட்டார் படகான குமுதினி நெடுந்தீவுத்துறைமுகத்தில் கடல் நீர் உட்புகுந்த வண்ணம் ''கவாட்டி'' எனப்படும் ஒருவகைப் பூச்சியின் வாசஸ்தலமாக தரைதட்டிக் கிடக்கிறது.

இப்படகிற்கென புதிய இயந்திரம் கொழும்பில் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் இருந்தபோதும் அதைப் பொருத்தி படகுச் சேவையை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. (இ 111)

# அச்சுவேலியில் கட்டாக்காலி மாடுகள்

அச்சுவேலி ஜூலை 16

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதி விவசாயிகள் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையினால் விவசாயம் செய்ய முடியாமல் அவலப்படுகின்றனர்.

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் பெருமளவு மாடுகள் கட்டாக்காலிகளாக பயிர் நிலங்களில் மேய்ந்து திரிகின்றன.

இதனால் விவசாயிகள் தமது பயிர்ச்செய்கை நிலங்களைச் சுற்றி வேலிஅடைக்க வேண்டிய நிலையில் உள்ளனர் இ - 1!)


## Spoken English With Grammar By BRITTO

செவ்வாய், வியாழன்
பிற்பகல் 2-00 மணி
வகுப்புகள்
நடைபெறுகின்றன

சிவாகி கல்வி நிலையம்
சாவகச்சேரி

(41752)


## 90 ஆம் நாள் நினைவுப் பூக்கள்

மண்ணில்: 27 — 11 — 1941



விண்ணில்: 19 — 04 — 1996

### திருமதி தவமணி நடராசா

அம்மா! உன்னழகு வதனத்தை யுன்னியுன்னி
இம்மா நிலத்திலென்றும் ஏங்குகிறோம்
நம்மினிய
வாழ்வுக்கு வகைசெய்த வல்லவளே இறைவனது
தாள்மலரில் இன்புறவே வாழி!

17 - 07 - 1996 புதன்கிழமை பேரம்பலம் வீதி, பெரியமாவடி, சாவகச்சேரியில் அமைந்துள்ள மருமகன் இ. சிவானந்தனின் இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

கணவன், பிள்ளைகள்

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி. (41794)


## தொண்டர் ஆசிரியர் சங்கம்
யாழ் மாவட்டம்

### விண்ணப்பப்படிவம் ஒப்படைத்தல்

மேற்படி சங்கத்தால் விநியோகிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைப் பெற்று இதுவரை மீளவும் ஒப்படைக்காதவர்கள் இன்று (16-07-96) செவ்வாய் காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை கீழ்வரும் பொருளாளர் முகவரியில் ஒப்படைக்கவும்.

திருமதி நீ. தர்மகுலசிங்கம்
145/5, நாவலர் வீதி,
(மனோகராதியேட்டர் அருகில்)
யாழ்ப்பாணம்.

(41801) செயலாளர்.


## கண்ணீர் அஞ்சலி

அமரர்
### பண்டிதர் இ. திருநாவுக்கரசு

(செயலாளர் இணுவில் ஸ்ரீமுருகன் சி. க. கூ. சங்கம் ஆரம்ப கௌரவ செயலாளர் யாழ். மா. சி. க. கூ. ச. சமாசம்)

பழம் பெரும் கூட்டுறவாளரான திரு. இ. திருநாவுக்கரசு அவர்களின் திடீர் மரணம் கூட்டுறவுத் துறைக்கு பேரிழப்பாகும். அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்

யாழ். மாவட்ட சி. க. கூ. ச. சமாசம்
(41792)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர் விரும்பும் தீர்வு எதுவோ அதை ஆதரிப்பதே எங்கள் கடமை

## மத்திய அமைச்சர் முரசொலி மாறன் குமுதத்துக்கு பேட்டி

சென்னை, ஜூலை 16

தங்கள் பிரச்சினைக்குத் தீர்வாக எது நல்லது என்று ஈழத் தமிழர்கள் முடிவு செய்கின்றார்களோ அதை ஆதரிக்க வேண்டியதுதான் எங்களுடைய கடமை. இதுதான் உங்களுக்கு நல்லது என்று கூறுகின்ற உரிமை வெளிநாட்டில் வாழ்கின்ற இந்தியத்தமிழருக்குக் கிடையாது.

— இவ்வாறு கூறினார் இந்திய மத்திய அமைச்சரும் திராவிட முன்னேற்றக் கழகப் பிரமுகருமான முரசொலி மாறன்.

மத்திய தொழில் அமைச்சராகப் பதவியேற்ற பின்னர் புதுடில்லியில் வைத்து ''குமுதம்'' வார இதழுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு கூறினார். அப்பேட்டியில் ஈழத்தமிழர் விவகாரம் குறித்து அவர் கூறியதாவது:-

குமுதம்: விடுதலைப் புலிகள் அல்லாத ஈழ விடுதலைக் குழுக்கள் உங்களைச் சந்தித்ததாக ஒரு செய்தி வந்திருக்கிறதே?

மாறன்: இல்லை. சந்திக்க விரும்புவதாகத் தகவல் வந்ததே தவிர இவங்க யாரையும் சந்திக்கவில்லை. சில பேர் வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்கள். அவ்வளவுதான்.

குமுதம்: புலிகள் மீதான தடையை மத்திய அமைச்சரவை நீடித்திருக்கிறது. தி.மு.க. இந்த விஷயத்தில் எந்த மாதிரியான நிலையை எடுக்கப் போகின்றது?

மாறன்: தி.மு.கவைப் பொறுத்தவரைக்கும் விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புக்களுடன் எந்தவிதமான தொடர்பும் கிடையாது. அதை ஒரு முறை அல்ல, பலமுறை நாங்கள் சொல்லி இருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் அங்கே என்ன நடக்கிறது என்று நாங்களும் உங்களை மாதிரிப் பத்திரிகைகள் மூலமாக அறிகிறோமே தவிர, நேரடியான தகவல் கிடையாது. நம்முடைய கவலை எல்லாம் அங்கிருக்கின்ற நம்முடைய தமிழ்ச் சகோதரர்கள் உரிமைகள் பெற்று வாழணும் என்பதுதான். அந்த உரிமைகளைத் தமிழ் ஈழம் மூலம் தான் பெறமுடியும் என்று அவர்கள் நினைத்தால் — அதற்கான தியாகங்கள் செய்ய அவர்கள் தயாராக இருந்தால் — ஓ.கே. பெறட்டும்; அல்லது ஓர் கூட்டாட்சி மூலமாக, அதிக மாநில சுயாட்சி பெற்றுத் தங்களுடைய நோக்கங்களை ஈடேற்ற முடியும்னு நினைச்தாலும் சரி, ஆகவே அதைத் தீர்மானிக்க வேண்டியது அவர்கள். அவர்கள் எது சரி என்று தீர்மானிக்கிறார்களோ அதை ஆதரிக்க வேண்டியது தான் எங்களுடைய கடமையே தவிர இதுதான் உங்களுக்கு நல்லது என்று சொல்கிற உரிமை வெளிநாட்டில் வாழ்கிற இந்தியத் தமிழர்களுக்குக் கிடையாது. அது தான் தி.மு.க. வினுடைய எண்ணம். ஆனால் என்னுடைய அனுதாபம் — என்னுடைய அனுதாபம் மட்டுமல்ல — தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மக்களுடைய அனுதாபம் முழுக்க அங்கே தமிழர்கள் உரிமையோடு வாழ வேண்டும் என்பதுதான். அந்த ஒரு நய்லெண்ணம் உண்டு. அதோடு சரி.

குமுதம்: ''நாம் எதுவும் செய்ய முடியாத helbless situation'' இல் இருக்கிறோமா?

மாறன்: நிச்சயமாக அப்படித்தான் இருக்கிறோம். காரணம், எங்களைப் பகைத்துக் கொண்டார்கள் அவர்கள் என்ன செய்ய முடியும்? இப்போது வந்து இந்தியா தலையிடணும் என்று சொல்கிறார்கள். எப்படித் தலையிட முடியும்? இந்தியா தலையிட்டபோது அதை வேண்டாம் என்று சொல்லித் திருப்பி அனுப்பினார்கள். இப்போது இந்தியா எப்படித் தலையிட முடியும்? அதற்கான எந்த விதமான அவசியமும்' இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

முதலில் வெளிநாட்டு மத்தியஸ்தம் வேண்டும் என்று திருமதி சந்திரிகா சொன்னார். அப்போது எல்.ரீ.ரீ.ஈ. கூடாது என்று கூறியது இப்போது மத்தியஸ்தம் வேண்டும் என்கிறார்கள். இது அவர்களே தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினையே தவிர. இந்தியா தலையிட்டுச் செய்யக் கூடிய நிலையில் இல்லை. ஏன் என்றால் ஒரு தரம் சூடு பட்டாயிற்று — என்றார்.

---

## வேதனைக்குரிய தமிழன்

இலங்கைத் தமிழ் அகதிகளுடன் நட்புணர்வுடன் பழகிய சுவிஸ் மக்கள் இப்போது கசப்பு உணர்வு கொண்டுள்ளனர்.

இலங்கைத் தமிழ் அகதிகள் விடயத்தில் சுவிஸ் அரசும் மனம்மாறி வருகிறது.

சுவிஸில் வாழும் சுமார் 25,000 ஈழத் தமிழர்களில் சிலர் வன்செயல்களில் ஈடுபடுவதே சுவிஸ் மக்களும், அரசும் தமது ஆதரவுப் போக்கை மாற்றிக் கொண்டதற்குக் காரணம்.

இந்த மாற்றத்தினால் சுவிஸ் அரசு இலங்கையர் மீது பல கட்டுப்பாடுகளைக் கொண்டு வருகிறது. அவர்களுக்கு எதிராகச் சட்டங்களையும் இறுக்கத் தொடங்கியுள்ளது.

இந்த கவலைக்குரிய தகவல்களை அண்மையில் பி.பி.ஸி. தமிழோசை வெளியிட்டிருந்தது.

ஈழத்தமிழர்களை பொல்லாதவர்களாக, வன்முறையாளர்களாக, சட்டம் ஒழுங்குக்குக் கட்டுப்படாதவர்களாக, சுவிஸ் அரசும், அந்த நாட்டுமக்களும் மட்டும் கருதவில்லை.

இலங்கைத் தமிழர்கள், மிகக் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்கள் அகதிகளாகத் தஞ்சம் புகுந்த எல்லா ஐரோப்பிய நாடுகளுமே அவர்களை நல்லொழுக்கம் குன்றிய இனக்குழுமம் என்ற இழிநிலையில் வைத்துப் பார்க்கத் தொடங்கிவிட்டன.

விதைப்பு இன்றி அறுவடை எப்படி வரும்? தன்வினை தன்னைச் சுடுவதே அன்றி பிறரையா சுடும்?

யாழ்ப்பாணத் தமிழர் சுயநலமிகள்; தானும் தனது குடும்பமும், பெரும்பாலும் வளத்துடன் வசதியுடன் வாழ்ந்தால் போதும் என்ற மனோபாவம் மேலோங்கியவர்கள்; அடுத்தவன் எக்கேடு கெட்டாலும் அவனுக்கு உதவும் மனம் இல்லாதவர்கள்.

எந்த ஒரு சின்ன விடயத்தில் கூட ஒருமித்த கருத்துடையவர்களாக இருக்க மாட்டார்கள். தான் சொல்வதே சரி என்று சாதித்து அடுத்தவனை அடக்கிவிடச் செயற்படுவார்கள். எதிரும் புதிருமாக, போட்டி, பொறாமை மிகுந்து நின்று குழப்பத்தை விளைவிப்பார்கள். தமக்குள் அடிபட்டுக் கொள்வார்கள்.

இப்போது யாழ்ப்பாணத்தில் பொருள்களை வாங்குவதற்காக நிற்கும் வரிசை ஒன்றில் போய் நின்றால் இந்த நிலைப்பாடுகள் சூரிய ஒளிபோல பிரகாசிக்கக் காணலாம். தொட்டில் பழக்கம் சுடுகாடு வரையுமல்லவா?

இல்லையேல் தாங்கள் அண்டிய மேற்கு நாடுகள் மனிதாபிமானத்துடன் தமக்குத் தஞ்சமளித்து, தொழில்வழங்கிப் பராமரிப்பதை மறந்து தமது சொந்த ஊர்ப்புத்தியையும் திமிரையும் சுவிஸிலும், ஜேர்மனியிலும், கனடாவிலும் ஏனைய வெளி நாடுகளிலும் காட்டுவார்களா?

கலாசார, பண்பாட்டு, வளங்கள் குன்றியிருந்த பல இனங்கள் இப்போது நாகரிகம் பெற்று முன்னேற்றமும், மேம்பாடும் அடைந்து வரும் இக்கால கட்டத்தில் —

தமிழர்கள் தமது பண்பாடு, கலாசாரம், வாழ்க்கை விழுமியங்களை மறந்து, இழந்து உலக சமூகத்தில் கீழ் நோக்கிப் போவது இனப்பற்று உள்ள தமிழர்களின் நெஞ்சைச் சுடுவதாகும். தமிழன் இப்போதாவது தன்னைச் சுயசோதனை செய்யத் தவறினால், சுய விமர்சனம் செய்து திருந்துவதற்கு பின்னின்றால், எதிர்காலம் சூனியமாவது நிச்சயம்.

---

### அரசின் தீர்வுத் திட்டம்:

## ஐ. தே. க. தனது நிலையை விரைவில் அறிவிக்கும்

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசின் இனப்பிரச்சினை தொடர்பான தீர்வுத் திட்டம் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு அடுத்த சில தினங்களில் தெரியவந்துவிடும்.

ஐ. தே. க. பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தமாத முற்பகுதியில் ஐந்து தமிழ்க் கட்சிகளுடன் ஐக்கிய தேசியக்கட்சி பேச்சுவார்த்தை நடத்தியது.

அந்த பேச்சுவார்த்தையின் அடிப்படையிலேயே ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு அமையும் என்றும் அவர் கூறினார்.

எனினும் வடக்குகிழக்கு இணைப்பையும் சமஷ்டி ஆட்சி முறையையும் ஐ. தே. க. தொடர்ந்து எதிர்க்கும் என்றும்— அவர் தெரிவித்தார். (இ)

## 75 தமிழ்க் கைதிகளை விடுவிப்பதற்கு நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 16

களுத்துறை சிறைச்சாலை கொழும்பு மகசீன் சிறைச்சாலை ஆகியவற்றில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ்க் கைதிகளில் 75 பேர் அடுத்த வாரம் விடுதலையாகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சட்டமா அதிபர் சரத்சில்வா தெரிவித்தார்.

இலங்கை தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எம். எஸ். செல்லச்சாமி சட்டமா அதிபரைச் சந்தித்து சிறையில் உள்ள தமிழ்க்கைதிகள் தொடர்பாகக் கேட்டபோதே மேற்கண்ட உறுதிமொழி வழங்கப்பட்டது.

75 பேர் விடுதலையாகி சிறையில் எஞ்சி உள்ள கைதிகள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும் என்றும்—

அவர்களில் பிணைவழங்கக் கூடியவர்களுக்கு பிணைவழங்கப்படும் என்றும் சட்டமா அதிபர் மேலும் தெரிவித்தார். (இ)

---

## குண்டு வீச்சினால் 25 மாடுகள் பலி!

### மட்டக்களப்பில் சம்பவம்

கொழும்பு, ஜூலை 16

பசுமாடுகள் அடைத்து வைக்கப்பட்டிருந்த பட்டி ஒன்றின் மீது குண்டு வீழ்ந்தது. இச்சம்பவத்தில் பட்டியில் அடைத்து வைக்கப்பட்டிருந்த பசுமாடுகளில் 25 மாடுகள் துடிதுடித்து உயிரிழந்தன.

மட்டக்களப்பு மாவட்டத்துக்கு மேற்கே செங்கலடி — பதுளை வீதியில் உள்ள பாலாமடு கிராமத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

குண்டுவீச்சு இடம்பெற்றபோது மாடுகளைப் பராமரிப்போர் அதிர்ஷ்டவசமாக அச்சமயம் அருகில் இருக்காதபடியால் உயிர் தப்பிக்கொண்டனர்.

இந்த குண்டுவீச்சுச் சம்பவம் காரணமாக விவசாயிகள் தமது வயல்களுக்குச் செல்ல அஞ்சுகின்றனர்.

இலுப்பையடிச்சேனைக்கு அருகில் இக்கிராமம் இருக்கிறது.

இறந்த மாடுகள் அனைத்தும் விவசாயி ஒருவருக்கே சொந்தமானவை.

---

## ஆசிரியர் போட்டிப்பரீட்சை விண்ணப்பத் திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 16

ஆசிரிய சேவை தரம் I இற்கான பதவி, உயர்வுப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பம் சமர்ப்பிப்பதற்கான முடிவு தினம் ஆகஸ்ட் 15ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

இப்பரீட்சை இம்மாதம் 20 ஆம் திகதி நடைபெறும் என இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருந்ததால் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த யாழ். மாவட்ட ஆசிரியர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக 20 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு போய்ச்சேரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால் தற்போது 'இந்தப் பரீட்சைக்கான விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டிருப்பதாகவும்—

பரீட்சைக்கான தினம் பின்னர் பரீட்சை ஆணையாளரால் அறிவிக்கப்படும் என்றும்—பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்ட பின்பு வடமாகாண ஆசிரியர் சங்கப் பொருளாளர் திரு. மு. தியாகராஜா தெரிவித்திருக்கிறார்.

(உ)

---

## ஸ்ரான்லி வீதிச் சம்பவத்தின் பின் உதவி வழங்கும் நாடுகள் தயக்கம்

### சண்டேரைம்ஸ் அரசியல் விமர்சகர் தெரிவிப்பு

கொழும்பு ஜூலை 16

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் சமீபத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் அரசுக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தி இருக்கிறது. யாழ்ப்பாணம் இன்னும்வழமை நிலைக்கு திரும்பவில்லை என்ற எண்ணத்தை இச்சம்பவம் யாழ். புனரமைப்புக்கு உதவ முன்வந்துள்ள நாடுகளுக்கு ஏற்படுத்தி உள்ளது.

'சண்டேரைம்ஸ்' அரசியல் செய்தியாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் திரும்பி வந்துள்ள தமிழ்மக்களின் நல்லெண்ணத்தைப் பெறும் நோக்கத்துடன் யாழ்ப்பாணத்தில் பெரிய அளவில் புனர்நிர்மாண வேலைகளை ஆரம்பிக்க அரசுதிட்டமிட்டுள்ளது.

அரசாங்கம் பெருமளவு நிதியை வெளிநாடுகளிடம் இருந்து இதற்காக எதிர்பார்க்கிறது

ஆனால் இவ்வளவு பெரிய தொகையை வெளிநாடுகள் வழங்குமா என்பது தற்போது சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

யாழ்ப்பாணத்து நிலைமை இந்த உதவி வழங்கும் நாடுகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு போதிய திருப்தியை அளிக்காததே இதற்குக் காரணம்.

சமீபத்தில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் சம்பவம், யாழ்ப்பாணத்தில் இன்னும் வழமை நிலை திரும்பவில்லை என்ற எண்ணத்தை இந்த நாடுகளுக்கு ஏற்படுத்தி இருக்கிறது

இப்படி அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## மாரிமுத்து பொன்னையா

அராலி மேற்கை பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற மாரிமுத்து தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் மகன் மாரிமுத்து பொன்னையா (பொன்னம்பலம் — ஆனந்தபவான்) கனகராயன் குளத்தில் காலமானார்.

இவர் திருமதி இராசலட்சுமியின் அன்புக் கணவரும் ஆனந்த நடராசா, திருமதி ஞானாம்பிகை, திருமதி ஞானமலர், திருமதி ஞானலதா (லண்டன்), ஆனந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி அன்னலட்சுமி, துரைராஜா, சண்முகராஜா (விரிவுரையாளர், வடமாகாண இணைந்த பல்கலைக் கழகக் கல்லூரி — வவுனியா), சிவபாலன் (லண்டன்) ஆகியோரின மாமனாரும் குமாரசாமியின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனகராயன் குளத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு. க. தர்மலிங்கம்

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.
(சி/2631)

## இராமசாமிக் குருக்கள் குமாரசாமிக் குருக்கள்

இராமசாமிக் குருக்கள் குமாரசாமிக் குருக்கள் 15 – 07 – 96 திங்கட்கிழமை இயற்கை எய்தி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், இராஜராஜேஸ்வரி, பவானி, ஜெகதீஸ்வரசர்மா, கமலாசனி, அம்பிகாதேவி, பரமேஸ்வரசர்மா, ஊர்மிளாதேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், முத்துக்குமாரசாமிக் குருக்கள், ஷண்முகநாத சர்மா, ஷண்முகரஞ்சனி, ஷண்முகசுந்தரக் குருக்கள், செந்திநாத சர்மா, செந்தில்நாத சர்மா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 16 07 – 96 காலை 10 மணி முதல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
கு. பரமேஸ்வர சர்மா
(மகன்)

வள்ளியம்மன் கோவிலடி,
சுழிபுரம்.
(41808)

## திருமதி அருளப்பு எலிசபேத்

(மிருசுவில்)

மிருசுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி அருளப்பு எலிசபேத் (பொன்னம்மா) அவர்கள் 13-07-1996 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்பு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் (பொன்னுத்துரை - முன்னாள் பிறப்பு, இறப்பு பதிவாளர்), அ. ஜெயசிங்கம் (இந்தியா), திருமதி லோ. மேரி மாகிறெற் ஆகியோரின் அருமைத் தாயாரும், லோறன்ஸின் அன்பு மாமியாரும், எமில்சுதா (கனடா), றஞ்சித் பேடினன்ஸ், டயாளினி (கொழும்பு Lion Shipping Ltd.), ஜெஸ்லி, ஜெயந்தினி (கனடா), றவி பேணாட் (கனடா), அமலோ, றுக்த்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டிமோன் லோறன்ஸின் பாசமிகு அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித நீக்கிலார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
I.W. லோறன்ஸ்
(மருமகன்)

''எமிலான்ட்'',
மிருசுவில்.
(41798)

## திருமதி தம்பையா மாணிக்கம்

(நயினாதீவு)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரான திருமதி தம்பையா மாணிக்கம் 15-07-96இல் நயினாதீவில் காலமானார். இவர் காலம் சென்ற தம்பையாவின் அன்பு மனைவியும், திருமதி பவானி இலங்கைநாதன் (உப அதிபர், கணேச மகாவித்தியாலயம்), அன்னபூரணி, ஞானசவுந்தரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருஷ்ணசாமி (ஓய்வுபெற்ற அதிபர்), மீனாட்சி, சிதம்பரநாதன் (ஓய்வு பெற்ற புலனாய்வுத்துறை அதிகாரி), சிவனாதன் ஆகியோரின் மாமியாரும், கிருபானந்தா (ஆசிரியர்), கிருபாநந்தி, ஸ்ரீராகவன், ஸ்ரீரங்கன், ராகுலன், கோகுலன், தவகுலன், குருகுலன், பிரியந்தி, அனுயந்தி, தனுயந்தி, புராதனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று 15-07-96இல் நயினாதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கி. கிருபானந்தா
(பேரன்)

5 ஆம் வட்டாரம்
நயினாதீவு.
(41803)

# வீடுகளில் இடம் கொடுத்து மாணவர்களுக்கு உதவுக

## பதில் துணைவேந்தர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 16

பல்கலைக்கழகத்தில் பயிலும் வெளிமாவட்ட மாணவருக்கு தங்க இடம் கொடுத்து உதவுமாறு பல்கலைக் கழகத்துக்கு சமீபமாக உள்ள வீடுகளின் உரிமையாளர்களுக்கு யாழ். பல்கலைக்கழக பதில் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பல்கலைக்கழகத்துக்கு அருகில் அமைந்துள்ள வீடுகளின் உரிமையாளர்கள். பல்கலைக் கழக மாணவர்களுக்கு இருப்பிடவசதி கொடுக்க மறுப்பதால் வெளிமாவட்ட மாணவர்கள் பெரிதும் கஷ்டம் அனுபவிப்பதாகவும்—

இவர்களை வீட்டில் வைத்திருப்பதால் பாதுகாப்பு அச்சம் ஏற்படலாம் என்று பயப்படாமல் இடம் வழங்கி உதவுமாறும்—அப்பகுதி வீட்டு உரிமையாளர்களை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

திருநெல்வேலி இராணுவ அதிகாரியுடன் இந்த விடயம் குறித்து தாம் உரையாடியதாகவும்—

மாணவர்களுக்கு எந்தவித பிரச்சினையும் வழங்க மாட்டோம் என்று அவர்கள் உறுதி கூறியுள்ளதாகவும்—பதில் துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## மீன்பிடி பொருள்கள் அபகரிப்பு

கொழும்பு, ஜூலை 16

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கல்முனைக் குடியிருப்பைச் சேர்ந்த இரண்டு மீன்பிடி முகாம்களிலிருந்து இனந்தெரியாதோரால் பல பொருள்கள் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

கண்ணாடி இழையிலான படகு ஒன்று. நீருக்கு அடியில் சுழியோடுவதற்கான உடைகள் உட்பட பல பொருள்கள் இவற்றில் அடங்கும் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்திருக்கிறது. (இ-4)

---

மிகப் பயங்கர...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் வரவு - செலவுத் திட்டத்தை எவ்வாறு தயாரிப்பது என்பது தமக்குத் தெரியவில்லை என்று பிரதி நிதி அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் தனது மனத் திண்டாட்டத்தை எடுத்துக் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் கண்டியில் இலங்கை வங்கியின் புதிய கட்டடத்துக்கான அத்திவாரக் கல்லை நட்டு வைத்துப் பேசுகையில் அவர் தமது நிலையைப் பின்வருமாறு தெரிவித்தார்.

சுதந்திரம் கிடைத்த பின்னர் இந்த நாட்டின் வரலாற்றில் வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் இக்கட்டான நிலை தற்போதுள்ளது போன்று என்றுமே ஏற்பட்டதில்லை. ஏனெனில் நாம் எண்ணிப் பார்க்க முடியாதளவில் போருக்கான செலவு படிப்படியாக அதிகரித்துக் கொண்டே செல்கிறது

போருக்கு இவ்வருடத்துக்கென ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 3 ஆயிரத்து 800 கோடி ரூபாவுக்கு மேலதிகமாக மேலும் ஆயிரம் கோடி ரூபாவை ஒதுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது — என்றார். (அ-3)

---

வடமராட்சி...

(1 ஆம்பக்கத் தொடர்ச்சி)

எனினும் அத்தியாவசிய தேவைகளுக்குச் சென்று வருவோருக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

5 ஆம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையும் தடையின்றி நடைபெற்றது.

அரச ஊழியர்கள் உட்பட பொதுமக்கள் பொது இடம் ஒன்றுக்கு அழைக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். (இ-118-173)

---

தேசிய மீட்பு...

((1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னணி தேர்தல் பிரசாரத்தின் போது வாக்களித்திருந்தது. அதன்படி அவர்கள் ஆட்சிக்கு வந்து நேற்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தி ஆனதை யொட்டி இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினரும் தேசிய மீட்பு முன்னணியின் பிரமுகருமான நிஹால் கலப்பதி தலைமையில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (இ-10)

---

சந்திரிகா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதே போன்ற ரகசிய விஜயம் ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா 1994 ஆம் ஆண்டிலும் மேற்கொண்டிருந்தார். அப்பொழுது அவர் சிங்கப்பூர் சென்றிருந்தார்

அவரின் [illegible] சிங்கப்பூர் விஜயம் நான்கு நாள்களுக்குப் பின்னரே தெரியவந்தது. (இ-10)

# மரண அறிவித்தல்கள்

## அப்பாக்குட்டி சிவஞானம்

இணுவிலைச் சேர்ந்த அப்பாக்குட்டி சிவஞானம் 14 - 07 - 96 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் அப்பாக்குட்டி தம்பதிகளின் அருமைப் புதல்வரும், சடாசிவம் தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகம்மாவின் அன்புக் கணவரும், சண்முகலிங்கம் (ஆசிரியர், சுதுமலை த. க. வித்தியாலயம்), வினாயகமூர்த்தி (ப. நோ. கூ. ச. சுன்னாகம் களஞ்சியப் பொறுப்பாளர்), அழகேசன், சிவனேசன் (ஆசிரியர், யா/ இணுவில் மத்திய கல்லூரி), அருந்தவமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், சா. முத்துக்குமாரசாமியின் (ஆசிரியர், யா/ இணுவில் இந்துக் கல்லூரி) பெரிய தந்தையும், அழகேசு, பொன்னம்பலம், சங்கரப்பிள்ளை, முருகையா, அன்னம், ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், க. முருகையா (கிராம அலுவலர், கோண்டாவில் வடமேற்கு J/115) தருமகுணராணி, விஜயலட்சுமி, மங்கையற்கரசி அரசி, யோகராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுபர்ணா, சுகன்யா, வினோபா, வினோறதன், வினோக்குமார், வினோதீபா, துவாதிகா, அமிர்தலோசனன், அமிர்தசிந்துயன், மதுபாஜினி, யாழினி, சிவகணேசன், கேதனன், சுவேதனன், ஜிவாஜனன், சுதன், கருணாலயன், வேதிகா, யுகந்தரா, கஜவதனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திங்கட்கிழமை 15 - 07 – 1996இல் தாவடி இந்துமயானத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. சண்முகலிங்கம்
(ஆசிரியர்)

தவஞானகிரி
தாவடி வடக்கு,
கொக்குவில்.
(41796)

திருமதி

## இராசம்மா சங்கரப்பிள்ளை

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வதிவிடமாகவும் கொண்ட இராசம்மா சங்கரப்பிள்ளை 10-07-96இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், கனகராசா (இளைப்பாறிய உதவிக் கணக்காளர் துறைமுக அதிகார சபை திருமலை), தவராசா (ஜேர்மனி), செல்வராசா (முழங்காவில்), தற்பராதேவி (கனடா), இந்திராதேவி (ஆசிரியை மட்டுவில் மகா வித்தியாலயம்), ரேணுகாதேவி (தாதி அரசினர் வைத்தியசாலை சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், தம்பிராசா, ஜெயசிங்கம் (வெளிக்களப் போதனாசிரியர்), கந்தசாமி (கச்சாய்), புஸ்பராணி, மனோரஞ்சிதம் (ஜேர்மனி), தெய்வநாயகி (முழங்காவில்) ஆகியோரின் அன்பு மாமியும், தினகரன் (கனடா), சிவகுமாரன் தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), நந்தகுமாரன் (மருத்துவபீடம் யாழ்ப்பாணம்), விஜிதா, தவபாலன் (பிரான்ஸ்), தயாபரன் (பிரான்ஸ்), தவறாஜினி (கனடா), நிரோஜி (ஜேர்மனி), சாமினி சுதர்சன், துர்க்காயினி, ஜசிந்தன், மிதிலா, கௌசிகா, கௌதமன் ஆகியோரின் பேர்த்தியும், கனகதுர்க்கா (கனடா), கோபி (கனடா) ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 11-7-96 அன்று மட்டுவிலில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ச. கனகராசா
(மகன்)

''அருணோதயம்''
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(41800)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிரைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 16-07-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org